1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி அன்று காலை 4 மணி அளவில் கீழ்ப்பாக்கத்தில் அண்ணாநகர் சாஸ்திரி நகர் குடிசைப் பகுதிகளில் ஒரு தீ விபத்து நடந்தது. ஒரு மண்ணெண்ணெய் விளக்கு, இரவில் குடிசைவாசிகள் உறங்கும் பொழுது கீழே விழுந்ததன் காரணமாக இவ்விபத்து ஏற்பட்டது. 81 குடிசைகள் தீக்கிரையாயின. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதுமில்லை. இதனால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 16,200 என்று கணக்கிடப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 80 விதம், 57 குடிசை சொந்தக்காரர்களுக்கு வீடுகளைத் திரும்பிக் கட்டுவதற்கும், துணிகள் வாங்குவதற்குமாக ரூ. 4,560 வழங்கப் பட்டது. இதைத் தவிர 10 குடிசைகளில் குடியிருந்தவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 20 விதம், துணிகள் வாங்குவதற்காக ரூ. 200 வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள 14 குடிசைகள் தீ விபத்தின்பொழுது காலியாக இருந்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு, அருகில் இருக்கும் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் தங்குவதற்கு இடவசதி அளிக்கப் பட்டது. மாநகராட்சி அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கினர்.

திரு. என். டென்னிஸ் : பாதிக்கப்பட்டவர்களுக்கு 'மணி காம் பென்சேஷன்' கொடுப்பதைவிட, மெடீரியல்லாகக் கொடுப்பதற் கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் சீரமைப்பதாக அறிவித்துள்ளது. குடிசை மாற்று வாரியத்தின் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்திருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய ஏரிகள், கண்மாய்கள் பராமரிப்பு

* 349 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையி லுள்ள ஏரிகள், கண்மாய்கள் முதலியவை அனைத்தையும் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*350 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன (Minor Irrigation Tanks) வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்யும் உத்தேசம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எந்த மானிய நிதியிலிருந்து செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன வரத்துக் கால்வாய்கள் ஊராட்சி ஒன்றியங்களினால், அரசிடமிருந்து பெறப்படும் சிறு பாசன மானிய நிதியிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறுபாசன நீர்நிலைகளைத் தன் வசம் எடுத்து பழுது பார்க்கும் வேலை சம்பந்தமாக குறிப்பேதும் அரசிடம் இல்லை.

திரு. த. சோனையா: சில கண்மாய்கள் பொதுப்பணித் துறையிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களினால் செய்யப்படுகின்றன. சில கண்மாய்கள் ஆர்.டி.ஓ. கண்ட்ரோலில் செய்யப்படுகின்றன. இப்படி சிறிய கண்மாய்கள் பல துறைகளினால் மராமத்து செய்யப்படுவதினால், கால்வாய் வெட்டும் வேலை மிகவும் தாமதப்படுகிறது. யார் செய்கின்றது என்ற பிரச்னையும் வந்து விடுகிறது. ஆகவே, எல்லா கண்மாய்களையும் ஒரே இலாகாவின் கீழ் வைத்து ஒரே மாதிரியாகச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASAMI: Sir, for the time being the Minor Irrigation Projects in Panchayat Unions are maintained according to the cycle system adopted by the Government. May I know, Sir, whether there is any proposal to strengthen the